IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, PERUNDURAI

STC No. 943/2015

**Pw**1 - **Ramesh**

**Accused present**.

Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act 1969( Central Act 44 of 1969 ) of the day of **Date 30.05.2025.**

**புகார்தாரர் மனுவின் பேரில் வரவழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. எதிரி எனக்கு எந்த வகையில் அறிமுகம் என்றால் எதிரி அவரது ரெடிமிக்ஸ் கான்கிரீட் சம்பந்தமாக வியாபாரம் செய்வதாக என்னிடம் அறிமுகம் செய்து கொண்டார். நானும் ரெடிமிக்ஸ் கான்கிரீட் தொழில் செய்து வருகிறேன். நாங்கள் பங்குதாரர் நிறுவனம் நடத்தி வருகிறோம். நானும், அருள் முருகன், தனசேகர், கண்ணம்மாள் பங்குதாரர்கள் ஆவோம். மற்ற பங்குதாரர்களுக்கு நிறுவனத்தில் வரவு செலவு பற்றி தெரியும். எதிரிக்கும், எனக்கும் ரெடிமிக்ஸ் கான்கிரீட் தொழில் சம்பந்தமாக எவ்விதமான தொடர்பும் இல்லை என்றாலும் எதிரி என்னிடம் JCP இயந்திரம் மற்றும் ரெடிமிக்ஸ் கான்கிரீட் தயாரிக்கும் இயந்திரத்தை வாடகைக்கு பெற்றதன் மூலம் பழக்கம் என்றாலும் சரிதான். எனது புகாரில் எதிரி என்னுடன் ரெடிமிக்ஸ் கான்கிரீட் தொழில் சம்பந்தமாக வரவு செலவு செய்ததாக குறிப்பிட்டுள்ளது என்றாலும் வாடகை பெற்றுக் கொண்டதாக குறிப்பிடவில்லை என்றாலும் சரியல்ல.

2. எதிரி வழக்கு காசோலையை 27.02.2015 ம் தேதியன்று புகாரில் சொல்லியுள்ளது போல் கொடுக்கவில்லை என்றாலும் மேற்சொன்ன இயந்திரங்களை 01.01.2014 முதல் 30.09.2014 வரையான காலகட்டத்திற்கு வாடகைக்கு எடுத்ததற்கு உண்டான 01.01.2014 ம் தேதியன்று நான் எதிரியுடன் ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொண்ட போது இந்த வழக்கு காசோலை உடன் மேலும் 2 காசோலைகளை தலா ரூபாய் 5,00,000 தொகை பூர்த்தி செய்து தேதி நிரப்பப்படாமல் என்னிடம் எதிரி கொடுத்தார் என்றால் சரியல்ல. ஒரு காசோலை தான் கொடுத்தார். எனது தொழில் சம்பந்தமான வரவு செலவு கணக்குகள் மற்றும் பதிவு சான்று நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன்.

3. எதிரிக்கும் எனக்கும் அறிமுகம் இல்லை என்றாலும், எனது கூட்டு பங்குதாரர் அருள் முருகன் எதிரியின் மாமனாரது ஊரைச் சேர்ந்தவர் என்றும் மேற்படியார்களுக்குள் தொழில் சம்பந்தமாக தொழில் தொடர்பு இருந்தது என்றால் சரியல்ல. எதிரி எனக்கு விசிடிங் கார்டு கொடுத்து அறிமுகம் ஏற்படுத்திக் கொண்டார். எதிரி என்னிடம் ரெடிமிக்ஸ் கான்கிரீட் மற்றும் JCP இயந்திரம் வாடகைக்கு கொடுத்து திரும்ப பெற்றதற்கு பின்னர் எனது நிறுவனத்திற்காக JCP மற்றும் டிப்பர் லாரி எதிரியிடம் இருந்து வாடகைக்கு பெற்று தற்போது வரை எங்களது நிறுவனத்திடம் உள்ளது என்றால் சரியல்ல. எங்கள் நிறுவனத்திடம் எதிரி மேற்படி இயந்திரங்களை வாடகைக்கு எடுத்தது சம்மந்தமான வரவு செலவு , 30.09.2014 ம் தேதியன்று 3 இலட்சம் மட்டும் கொடுக்க வேண்டிய பாக்கித் தொகை உள்ளது என்றாலும் அதன் பிறகு எங்கள் நிறுவனத்தினர் எதிரியிடம் பெற்ற வாகனத்திற்கு வாடகை தொகையை கழித்த பின்னிட்டு மேற்படி வாடகையை எதிரிக்கு கொடுத்தால் போதும் என பேசி தான் நாங்கள் வாடகைக்கு வாகனங்களை எடுத்துக் கொண்டோம் என்றால் சரியல்ல.

4. எங்களிடம் எதிரியின் வரவு செலவு தொடர்பான கணக்கு விவரம் உள்ளது. வரவு செலவு கணக்குகள் எங்கள் நிறுவனத்தில் ஏற்படுத்திக் கொண்டது என்றால் சரியல்ல அனைத்தும் வங்கி பரிவர்த்தனைகள் ஆகும். எதிரிக்கும் எங்கள் நிறுவனத்திற்கும் கொடுக்க வேண்டிய வாடகை பாக்கி தொகை கழிந்த பின்னரும் நான் எதிரியிடம் பெற்றுக் கொண்ட வாகனத்திற்கு வாடகை செலுத்தாததால் எதிரி எங்கள் நிறுவனத்திடம் வாடகை தொகை கேட்டதால் நான் எதிரி மீது முன்னரே பெற்ற அவரது காசோலையை வைத்து இந்த புகாரை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரி எங்கள் நிறுவனத்திடம் வாடகை பணம் தராததால் பஞ்சாயத்துதாரர்கள் முன்னிலையில் பைசல் பேசப்பட்டு எங்கள் நிறுவனம் பணம் கொடுப்பதாகவும், வழக்கை திரும்ப பெற்றுக் கொள்வதாகவும் உத்தரவாதம் கொடுத்ததால் தான் நான் வழக்கை நீண்ட காலமாக நடத்தாமல் இருந்தேன் என்றால் சரியல்ல.

**5.** எதிரிக்கு நான் பணம் கொடுக்காததால் எதிரி பணம் கேட்டபோதெல்லாம் நான் வீண் சாக்கு போக்கு சொல்லி வந்ததாலும் வழக்கினை திரும்ப பெற்றுக் கொள்ள முன்வராததாலும் எதிரி எங்களை மீண்டும் பணம் கொடுக்க சொல்லி நெருக்கடி கொடுத்ததால் தற்போது வழக்கை நீண்ட காலம்கழித்து நடத்துகிறேன் என்றால் சரியல்ல. நான் எதிரி மீது வழக்கு நடத்த தயாராக இருந்திருந்தால் நான் முன்னரே நடவடிக்கை மேற்கொண்டிருப்பேன் என்றால் சரியல்ல எனக்கு உடல்நிலை சரியில்லாமல் இருந்தது. நான் புகாரில் கூறியுள்ளவாறு புகாரில் சொன்ன தேதியில் எதிரி என்னிடம் எந்த காசோலையும் கொடுக்கவில்லை என்றாலும் குறிப்பிட்ட தேதியில் காசோலை பணம் பெற்றுக் கொள்ள உத்தரவாதம் அளிக்கவில்லை என்றாலும் சரியல்ல.

6. 2022 வரை எதிரியிடம் நாங்கள் பணம் கொடுக்காததாலும், அவருடைய வாகனங்களை திரும்ப கொடுக்காததாலும் எங்கள் மீது எதிரி காவல் கண்காணிப்பாளரிடம் புகார் அளித்த போது நீண்ட நாட்களுக்கு முன்பு நடந்த சம்பவம் என்பதால் காவல் துறையில் எதிரி எங்கள் மீது கொடுத்த புகாரை பெற்றுக் கொள்ளவில்லை என்றால் சரியல்ல. எதிரி என் மீது புகார் கொடுத்த விவரம் எனக்கு தெரியும் என்பதால் தான் சரியல்ல என்று சொல்கிறேன் என்றாலும் உண்மையில் எனக்கு தெரியாமல் இருந்திருந்தால் அது பற்றி தெரியாது என பதிலளித்திருப்பேன் என்றால் சரியல்ல. எதிரி என் மீது தவறாக சொல்கிறார். மற்ற கூட்டு பங்குதாரர்களை விசாரிப்பதில் எனக்கு ஆட்சேபனை இல்லை. வரவு செலவு சம்பந்தமான கணக்குகளை நீதிமன்றத்தில் எப்பொழுது சமர்ப்பிக்க முடியும் என்றால் இன்றே தாக்கல் செய்ய தயாராக உள்ளேன்.

7. வரவு செலவு கணக்குகள் உண்மையானதாக இருந்தால் நான் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்த சமயமே தாக்கல் செய்திருப்பேன் என்றாலும் வழக்கிற்கு பின்னிட்டு பொய்யாக தயார் செய்த ஆவணம் என்பதால் தற்போது தாக்கல் செய்வதாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு உடல்நிலை சரியல்லாத காரணத்தால் முன்னரே தாக்கல் செய்ய முடியவில்லை. எதிரிக்கு எங்கள் நிறுவனத்திற்கும் புகாரில் குறிப்பிட்டுள்ளது போல் தொழில் ரீதியாக வரவு செலவு இல்லை என்றாலும் எதிரி எங்களுக்கு பணம் கொடுக்க வேண்டியது இல்லை என்றாலும் நாங்கள் எதிரிக்கு

பணம் கொடுக்க வேண்டியுள்ளதால் இந்த வழக்கு நிலைக்கத்தக்கது இல்லை என்றால் சரியல்ல. எதிரிக்கு எனக்கும் தொழில் ரீதியான வரவு செலவு இருந்தது.

8. எதிரிக்கும் எங்கள் நிறுவனத்திற்கும் தொழில் சம்பந்தமான வரவு செலவு இல்லை என்றாலும் வாடகை தொடர்பான வரவு செலவுகள் மட்டும் இருந்தது என்றால் சரியல்ல. வழக்கு காசோலையை என்னிடம் கொடுத்தாக புகாரில் குறிப்பிட்டுள்ள தேதி மற்றும் காசோலையில் குறிப்பிட்டுள்ள தேதியையும் எதிரி மறுக்கிறார் என்றால் சரியல்ல. புகாரில் நான் உண்மையான சங்கதிகளை மறைத்து பொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

இல்லை.

Signature of the Witness

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
பெருந்துறை